செ.வெ.எண். 45 நாள். 29.8.2011

**நாமக்கல் மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பில் 3 நபர்களுக்கு இலவச சலவைப் பெட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**



29.8.2011 நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ஜெ. குமரகுருபரன்,இ.ஆ.ப. அவர்கள் பயனாளிக்கு இலவச சலவைப்பெட்டி வழங்கினார்.

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் குடும்ப அட்டை வேண்டுதல், வீட்டுமனைப்பட்டா, முதியோர் உதவித்தொகை, கல்விக்கடன், பட்டாமாறுதல், விதவை உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை உள்ளிட்ட கோரிக்கைகள் அடங்கிய 632 மனுக்கள் வரப்பெற்றது. மனுக்களை பரிசீலித்த மாவட்ட ஆட்சித்தலைவர் மனுக்களை சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் அளித்து மனுக்களின் மீது 15 நாட்களுக்குள்

உரிய நடவடிக்கை எடுக்குமாறும், எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து பொதுமக்களுக்கு தெரிவிக்கவும் அறிவுறுத்தினார்.

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பில் 3 நபர்களுக்கு இலவச சலவைப் பெட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி ஆர். சீத்தாலட்சுமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு குழந்தைவேலு, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு பாரிவேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல்.